O.S. No.12/2023

16.07.2025

**வா.சா.1**

**திரு மோகன்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (1-ம் பிரதிவாதி தரப்பில்)**

நான் 2001ம் ஆண்டு பிறந்தேன். அதற்கு முன்பு என் குடும்பத்தில் என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. தாவா சொத்து சம்மந்தமாக நான் வழக்கு முன்னறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. 1-ம் பிரதிவாதி என் அத்தை பையன். 1-ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 103/1996 வழக்கு நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 1-ம் பிரதிவாதியின் தாயார் லலிதாவின் பொது அதிகாரம் பெற்ற முகவராக சத்தியநாராயணன் வழக்காடினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் எனவும் தற்போது வழக்கிற்காக தெரியாது

என பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. புல எண் 183/1 சொத்து சம்மந்தமாக மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கிலும் 1-ம் பிரதிவாதியின் தாயார் லலிதாவின் பொது அதிகாரம் பெற்ற முகவராக சத்தியநாராயணன் வழக்காடினார் என்றால் தவறு. வழக்கு சொத்து தொடர்பாக 1-ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக வருவாய் கோட்டாட்சியரிடம் என் தகப்பனார் மேல் முறையீடு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். மேற்படி மேல் முறையீட்டில் உயில் ஆவணப்படி என் மகனுக்கு சொத்து சொந்தம் எனவும் அதனால் பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேல் முறையீட்டில் என் தகப்பனார் உயில் இல்லாததால் அதுபற்றிய விபரம் கூறவில்லை எனவும் அந்த விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் எனவும் சொன்னால் தவறு. பட்டா மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டு 1-ம் பிரதிவாதியின் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவினை உறுதி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி, அது சட்டத்திற்கு புறம்பாக வழங்கப்பட்ட உத்தரவு. அந்த உத்தரவின் பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் முன்னிலையில் என் தகப்பனாரால்

சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. எந்த சீராய்வு மனுவும் என் தகப்பனாரால் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை WP No.28431/2022 1-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி. அந்த நீதி பேராணை தற்போதும் நிலுவையில் உள்ளது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.07.16 11:37:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.